**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**OS No.5/2020**

2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Chief Examination of DW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலகோபாலன் | தந்தை பெயர் | மாணிக்கம் |
| கிராமம் | கந்தர்வகோட்டை | தாலுகா | கந்தர்வகோட்டை |
| வயது | 44 | தொழில் | மண்டல துணை வட்டாட்சியர் |

நாள் : 16.10.2025
பி.சா.2
**முதல் விசாரணை**

1) நான் தற்போது கந்தர்வகோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில், மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ந.க.எண்.9363/2010/அ5 நாள் 14.08.2010 தேதியிட்ட வழக்கு கோப்பு மூன்றாண்டு முடிவு எண்ணிட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால், அந்த கோப்பு 2013 ஆம் ஆண்டு அழிக்கப்பட்டுவிட்டது. நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பிரதிவாதி முத்துவேல் என்பவரின் வீடு கஜா புயலின் இடிந்து சேதமடைந்ததற்கு, நிவாரண தொகை வழங்கியதற்கான ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் இல்லை. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ந.க.எண்.9363/2010/அ5 நாள் 14.08.2010 தேதியிட்ட செயல்முறைகள் எங்கள் அலுவலகத்தில் பணிபுரிந்த வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த காலகட்டத்தில், திருமதி.பாக்கியலெட்சுமி என்பவர் தான் வட்டாட்சியராக பணியில் இருந்தார். **(மேற்படி ந.க.எண்.9363/2010/அ5 நாள் 14.08.2010 தேதியிட்ட செயல்முறைகள் பி.வா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** (வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்படி ஆவணம் நகல் என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆவணம் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

2) பிரதிவாதி அந்த இடத்தில் இருந்ததால் தான் அவருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. பொதுவாக சொத்தில் குடியிருக்கும் நபருக்கு தான், அந்த சொத்திற்காக நிவாரணம் வழங்கப்படும்

என்றால் சரிதான். அவ்வாறு நிவாரணம் வழங்கப்படும் போது, சொத்தை பார்வையிட்டு தான் வழங்கப்படும் என்றால் சரிதான்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

1) பி.சா.ஆ.3 ஆவணத்தில், சர்வே எண் 95/11B எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில், கூரை வீட்டிற்கு ஒரு மின்விளக்கு இணைப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்ன வகைப்பாடான வீட்டிற்கு நிவாரணம் வழங்கப்பட்டது என சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, கூரை வீடு என்று சொல்லப்பட்டுள்ளது. கூரை வீடு மின் கசிவினால் எரிந்ததற்காக நிவாரணம் வழங்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தாவா சொத்திற்கான ஆவணம் இல்லை என்றாலும், பிரதிவாதிக்கு சொந்தமான வேறு ஒரு இடத்திற்கு உரியது என்றாலும் எனக்கு தெரியவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

பொதுவாக வீடு சேதமடைந்ததற்கு வழங்கப்படும் நிவாரண உத்தரவில், சொத்தின் சர்வே எண் குறிப்பிட்டு வழங்கப்படுமா என்றால் சர்வே எண் குறிப்பிடப்படுவதில்லை, வீட்டு வரி ரசீது வாங்கிக்கொண்டு நிவாரணம் வழங்கப்படும். பொதுவாக சொத்தில் குடியிருக்கும் நபருக்கு தான் வீட்டு வரி விதிக்கப்படும் என்றால் சரிதான், வீடாக இருந்தால் வீட்டு வரி ரசீதையும், காலி இடமாக இருந்தால் இடத்தில் சர்வே எண்ணையும் குறிப்பிடுவோம்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**